1424 1424

உலகரட்சகர்

# முஹம்மது நபி

(ஸல்)

ஹிஜ்ரி 1354௵ ரபீஉல் அவ்வலுக்காக
(14-6-35)

லண்டன் தி வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸோஸியேஷன்
ஜீவிய தலைவர்

**டாக்டர் காலித்ஷெல்ட்ரேக்**

அவர்களால் எழுதப்பட்டது

சென்னை

**ஹிபாஜத்துல் இஸ்லாம்**

[illegible]ங்கத்[illegible] மொழிபெயர்த்து அச்சிட்டு
[illegible]கிக்கப்பட்டது.

Q7:31
N35
171907

# ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிவிப்பு.

சோதரீர் !

சென்னையம்பதியின்கண் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம், சத்திய இஸ்லாத்திற்கு ஆற்றி வரும் தொண்டுகளை நீங்கள் நன்குணர்ந்தே இருக்கிறீர்கள். சத்திய இஸ்லாம் பல வகையிலும் தாக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கல் கிறிஸ்தவர்களும் மற்றொருபக்கல் ஆரியரும் இஸ்லாத்தை தாக்க முயற்சித்து வருகின்றனர். இதற்குதக்க பரிகாரஞ் செய்யவேண்டியது நம்மவரின் கடமையாக இருந்து வருகிறது. மற்றொரு பக்கல், நம்மிடையே ஒரு சிலர்தோன்றி வழிகெட்டதும் மறுக்கப்பட்டுப் போனதுமான 'காதியானிக் கொள்கைகளைத் தந்திரமாய்ப் பிரசாரம் புரிந்துவருகின்றனர். அதில் நம்மக்கள் சிக்கிக்கொள்ளாமலிருப்பான்வேண்டி, அக் கொள்கையின் கெடுதிகளையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தக்க முறையில் எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டியதாயு மிருக்கிறது. இத்துறைகளில் நம் சங்கம் அரும்பிரயாசையோடு தீவிரப் பிரசாரஞ்செய்து வருகிற தென்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த விஷயம். இந்நோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவான் வேண்டியே "ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகை" நடத்தப்பட்டு வருகிறது. இதனை வாசிக்கும் மக்கள் மார்க்க பக்தியுடையவர்களாகவும், இஸ்லாத்தின் அரும் போதனைகளைத் தெரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், காதியானிகளின் வலையில் சிக்காமல் அவர்களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கின்றவர்களாயுமாய் விடுகின்றனர். இவ்வரும் அம்சங்கள் பொருந்திய மாசிகையை தாங்களெல்லீரும் வாங்கி வாசிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்க முயற்சிப்பீர்களாக. இதுவே நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் பேருபகாரமாகும். எனவே, நமது சங்கத்தின் நோக்கங்களைப் பிரசாரம் புரிவதற்காக, ஜனாப்களான மௌலானா மௌலவீ முஹம்மது மியான் சாஹிப், மௌலானா மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் இவ்விருவர்களையும் சங்கப் பிரதிநிதிகளாக தென் ஜில்லாக்களுக்கு அனுப்பியிருப்பதால், ஆங்காங்குள்ள நண்பர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய வசதிகளைச்செய்து, மௌலானாக்களின் அரும் உபந்நியாஸங்களைக் கேட்டு பயன் பெறுவதுடன் நூற்றுக்கணக்கில் மாசிகைக்குச் சந்தாதாரர்களைக் சேர்த்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்.

# முகவுரை

முஸ்லிம்களாகிய நாம் பிறவிகொண்டதின் கருத்து ாது? உயிருள்ள வரையில் உண்டு உடுத்து அப்பால் கண் மடுவதுதானு? அன்று அன்று. மற்று, ஆண்டவனது அருள்வாய்க்கப்பெறுதல், அவனது மெய்யடியாராதல், மெய்யான முஸ்லிம்களாயிருத்தல், ஒப்பற்ற நமது மார்க்க விசேஷத்தை உணர்ந்து நடத்தல், அதனை அவனியெங்கும் பரப்புதல், மானிட கோடிகளுக்கு மகிமை தேடித் தருதல் முதலியன அல்லவா?

அங்ஙனம் முஸ்லிம்களாகிய நாம் நடத்தற்கு ஆண்டவனே வழிகாட்டியுள்ளான். அந்த வழி என்ன? நம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுவதேயாம். அதற்கு அத்தெய்வத் தூதரின் தூயவாழ்க்கை நமக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். உலகினரை உய்விக்க வந்த அப்பெருமானவர்களின் அமுத வசனங்களை உச்சிமீது கொண்டு, நடைமுறையை மேற்கொள்ளுங்கால் இம்மை மறுமைப் பேறுகளை ஒருங்கே எய்துதல் திண்ணம்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அவதரித்த காலத்திலே, அநாகரிகராய்க் கிடந்த அரேபியர் அப்பெருமானுரது பேருரை கேட்டு, போதங்கொண்டு, மடமை விடுத்து, மகிமை எய்தி, மாநிலமெங்கும் புகழ்பெறும் பேராசுநிறுவி, இம்மைப் பயன்களை யடைந்து, மறுமைப் பேறுக்கும் பாத்திரமாயினர். இஸ்லாம் மார்க்கம் எங்கும் பரவிற்று. அதனைத் தழுவிய மக்களும் மகிழ்ச்சி கொண்டனர்.

அத்தகைய அருஞ்சிறப்புகளுக்கு மூல புருஷரான நம் பெருமான் திருநபி (ஸல்.) அவர்களின் அவதாரதினமான ரபீஉல் அவ்வல் 12-ந்திகதி இவ்வாண்டில் 14-6-35-ல் வருகிறது. மகாபுனிதமான அத்தினத்தை உலகிலே முஸ்லிம்கள் அனை

வரும் கொண்டாடுகின்றனர். தமிழகத்தின்கண் வசிக்கும் நம்மவரும் சிறப்பாகக் கொண்டாடுதல் கடமையாம். அக் கொண்டாட்டம் அர்த்தமற்ற ஆடம்பரமான கொண்டாட்டமாக இராமல், மார்க்கக் கட்டளைகளை மனப்பூர்வமாக நிறைவேற்றும் சீரிய முறையில் கொண்டாடுதலே தலை சிறந்ததாம்.

1967 600 008

ஆனதுபற்றி பேரறிஞரில் பலர் ஆலோசனைசெய்து, நாயகம் (ஸல்.) அவர்கள் திருஅவதாரம் புரிந்துள்ள தினத்தை நன்குகொண்டாடுவதற்காக, நம்பெருமான் (ஸல்.) அவர்களின் தூய வாழ்க்கை விவரத்தை விளக்கி ஒவ்வோர் அமிசத்தையும் உருக்கமாகக்க கூறும் புத்தகமியற்றி, அதனை நானாவித பாஷைகளிலும் வெளியிட்டு வருகின்றனர். தென்னாட்டின் தலைநகரான சென்னையின்கண் மார்க்கநலங்கருதி நிறுவப்பட்டுள்ள நம் " ஹிபாஜத்துல் இஸ்லாம் " சங்கத்தாரும் அப் புத்தகத்தைக் தமிழ் மொழியில் வெளியிட்டு வருவதையும், கொண்டாட்டத்திற்கான பொறுப்பை ஏற்று இயன்றவரை முயன்று வருவதையும் அன்பர்கள் அறிவர்.

இந்த ஆண்டிலே அத்தினத்தன்று வெளியாகும் புத்தகமோ முன்னைய வருஷங்களைப்போலல்லாது புது மாதிரியில் இருத்தல் கவனிக்கத்தக்கது. தனிப்பட்ட மனிதனது அன்றாட வாழ்விலும், சமூகத்தின் வாழ்விலும், தேசத்தின் வாழ்விலும் மக்களின் மனத்தைக் கலக்கும்படியான எத்துணையோ சிக்கல்கள் நேருகின்றன. உதாரணமாக, இன்று உலகிலே பணத்தில் பெருத்த அமெரிக்கா ஐக்கிய நாடுகளை எடுத்துக்கொள்வோம். பிழைப்பில்லாத் திண்டாட்டமும் வியாபார மந்தமும் அங்கே அதிகம். அதனைச் சமாளிக்க எண்ணி, அத்தேசத் தலைவர் நாள்தோறும் பற்பல சட்ட திட்டங்கள் இயற்றிவருகிறார். ஆயினும் தொல்லை ஒழிந்தபாடில்லை.

இங்கிலாந்தைப் பார்ப்போம். அங்கேயும் பிழைப்பில்லாத் திண்டாட்டம், பணத்தட்டு, அவற்றைச் சமாளிக்க வகைகாணாது அத்தேசம் திணறுகின்றது. மந்திரிமார் பற்

840 29.7.63

ல யோசனை செய்கின்றனர். சபையையே புதிய மாதிரியில் அமைக்கலாமா என்றும் எண்ணி வருகின்றனர்.

பிரான்ஸ் தேசத்திலோ மந்திரி சபைகள் ஆட்டமெடுத்துக்கொண்டே யிருக்கின்றன. அச்சபைகள் திடீரென்று தோன்றுவதும், உடனே சட்டென்று மறைவதுமாயுள. ராஜீயக்கட்சிகளோ சொல்லிமுடியா. கிளர்ச்சியும் உணர்ச்சியும் கூறத் தொலையா.

நமது இந்தியா தேசத்தை நோக்குவோம். அரசாங்கமும் சரி, ஜனசமூகமும் சரி, நிம்மதியுடன் இருக்கவில்லை. சொல்லமுடியாத பிரச்சினைகள் மக்கள் மனத்தையும் அரசாங்கத்தின் சிந்தையையும் அலைத்துநிற்கின்றன. வகை காணாத திகைப்பே மேலிட்டுளது.

தமிழ் மாகாணத்தின் நிலையை எண்ணிப் பார்ப்போம். நில விளைவை நன்குவிற்றுப் பணங்காண வகையில்லை; ஏழைகளுக்கு வயிறார, உண்ண வகை கிடையாது; பிழைப்பில்லாத் திண்டாட்டம் தலைமிஞ்சியுளது. படித்த இளைஞர்களின் பாடு பகர ஒண்ணாது. கஷ்டநஷ்டம் அடையாதார் ஒருவருமிலர். விவசாயிகளும் வியாபாரிகளும் படித்தோரும் படியாதோரும், ஏழையும் பணக்காரனும் ஏங்கியே நிற்கின்றனர். இத்தகைய சிக்கல்களை எல்லாம் சமாளிக்க வகைதுறை வகுத்து விளக்கியிருப்பது யார்?

யாரும், தத்தளிக்கவேண்டாம். சிக்கல்களெல்லாம் தீர நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தூய வாழ்க்கையிலும், அமுதவசனங்களிலும், அப்பெருமானவர்களின் மூலம் உலகினுக்குஅருளப்பெற்ற திருகுர்ஆன் ஷரீபிலும் வழி முறைகள் விவரிக்கப்பட்டுள என்று எடுத்துக் காட்டும் மாதிரியில் இந்த ஆண்டு "ஸீரத் பிரசங்கம்" அமைந்துளது. இது ஒரு புதுமாதிரியேயாகும்.

தீர்க்கதரிசிகளிலெல்லாம் மகாசிறந்த தீர்க்கதரிசி நம்பெருமான் (ஸல்.) அவர்களே என்பதும், ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னம் அவர்கள் காட்டியுள்ள வழி இன்றைக்கு மட்டுமின்றி என்றைக்கும் பயன்படுமென்ப

தும், முஸ்லிம்களுக்கு மட்டுமேயல்லாது எல்லா மதத்தாரு கும் ஜாதியாருக்கும் அது ஏற்குமென்பதும், அவ்விதம் நட தால் மானிடவர்க்கமனைத்தும் கஷ்ட நஷ்டமின்றிக் கால தள்ளலாம் என்பதும், அப்பிரசங்கத்தில் உள்ளங்கை நெ லிக்கனி போல் விரித்தும் தொகுத்தும் வகுத்தும் உரைக்கப பட்டுள்ளன.

அத்தகைய பிரசங்கத்தை இந்த ஆண்டிலும் நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தார் வழக்கம் போல் வெளி யாக்கி அனைவருக்கும் வழங்குகின்றனர். மானிட வர்க்கத்தார் அனைவருக்கும் இப்பிரசங்கம் ஓர் ஊன்றுகோல்போல் உதவு மாயின், அதுவே நம் சங்கத்தார் எதிர்பார்க்கும் ஊதியமா கும். நாயகம் (ஸல்.) அவர்கள்பால் பக்தி விசுவாசங்கொண் டுள்ள அனைவரும் நேர்மையான முறையில், முஸ்லிம்களல் லாதாரும் கண்டு வியக்கும்படியான முறையில், பிற மதத் தினருக்கும் வழிகாட்டிபோலுள்ள முறையில், பரிசுத்த ஜனன தினத்தைக் கொண்டாடி, பரிசுத்த இஸ்லாம் மார்க்கத் தின் சிறப்பை வானுற ஓங்கச் செய்வார்களாக.

வாயளவில் நாயகம் (ஸல்.) அவர்கள் என்று கூறுவதில் பயன் உண்டோ? செயலளவில் இருத்தல் வேண்டுமன்றோ? அதுவே நமது இஸ்லாம் மார்க்கத்திற்கு ஓர் உயர்வும் சிறப் பும் தூய்மையும் ஆகும். இஸ்லாம் மார்க்கம் எங்கும் ஓங் குக! முஸ்லிம்கள் என்றும் தழைக்க! நாயகம் (ஸல்.) அவர்களின் அருள் அனைவருக்கும் கிட்டுக! ஆமீன்!

இங்ஙனம்:

காரியதரிசிகள்,

**ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்,**

சென்னை.

# உலக ரட்சகர்

# முஹம்மது நபி (ஸல்.)

## ஸீரத் பிரசங்கம்

அன்பர்களே!

பல்லாண்டுகளுக்கு முன்பு, பூவுலகம் இருந்த நிலைமை யாது? நவீன நாகரிகம் வளர்ந்து வந்துள்ள தன்மையும் யாது? இரண்டையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். பார்த்தால், 1300 ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமை புலப்படும். அப்போதிருந்த நிலைமை என்ன? சன்மார்க்கம் மங்கிக் கிடந்தது; சீரும் சிறப்பும் வாய்ந்த நாகரிகங்கள் நலிந்து கிடந்தன; வல்லரசுகள் ஒன்றையொன்று சின்னபின்னஞ் செய்து நின்றன; மார்க்கம் வெறும் வார்ப்படம் போலிருந்தது; அதற்கு ஜீவநாடி இல்லை; மெய்யுணர்ச்சியும் கிடையாது. மற்று, சடங்குகளும் வெளித் தோற்றங்களுமே நிரம்பியிருந்தன; பேராசையையும் நெறிப்பிசகையும் மறைத்துக் கொள்ளவே மதவேஷங்கள் பயன்படலாயின.

அத்தகைய காலத்திற்கு முன்னம், உலகிலே மதா சாரியர்கள் தோன்றுமலில்லை; தோன்றி, மார்க்கத்தைப் ப சுத்தமாக்கவும், மானிட வர்க்கத்தைக் கைதூக்கிவிட்வு பெருமுயற்சி செய்தார்கள். ஆயினும் அவர்களது சீட களோ மத போதத்தின் உட்பொருளை உணரவில்லை; மற்று சடங்குகளை மட்டும் மேற்கொண்டிருந்தனர். எனவே உல கம் கேவல நிலைமை எய்தியது. இந்நிலையில், சத்தியத்தை உயிர்ப்பிக்கவும், தவறுகளைத் திருத்தவும், மனிதவர்க்கத்தை ஓர் ஒழுங்குபடுத்தவும், திருவாக்கான பெருஞ் செய்தி யொன்று தேவையாயிற்று. மேலும் பற்பல தேசமக்கள் தங்களுக்குள்ள குறுகிய விருப்பு வெறுப்புக்களை விடுத்து, மானிட கோடிகளின் நலங்கருதித் தொண்டாற்றும் வண் ணம் அவர்களை ஒருமனப்படுத்தி நெறிப்படுத்தவும் திரு வாக்கு அவசியமாயிற்று.

## அரேபியாவின் நிலை

அக்காலத்தில் அரேபியாவைப் பலரும் இலட்சியஞ் செய்யவில்லை. அதன் அருகே, பாரசீகம், ரோமாபுரி ஆகிய இரண்டு வல்லரசுகளும் தலை சிறந்து விளங்கின. அவ் விரண்டும் ஒன்றினென்று கைமேலாயிருக்கப் போர்புரிந்து வந்தனவே யன்றி வேறன்று. ஆதலின் அயலக வல்லரசு களின் தொல்லையின்றி அரேபியர் தங்கள் இஷ்டம்போல் வாழ்ந்து வரலாயினர்.

உலக அமைப்பில் அரேபியாவின் நிலைமை வெகு விசித் திரமாகும். கீழ்நாடு, மேல்நாடு எனப்படும் இரண்டு பிரிவி னுக்கும் இடையேயுள்ளது அரேபியா. ஆதலின் அவ்விரண்டு பிரிவிலும் செல்வாக்குப் பெறும்படி அதற்குள்ள சிறந்த அமைப்பே அமைப்பு! பொதிமாடுகளும் குதிரைகளும் ஒட்டைகளும் கொண்டு, ஆயிரக்கணக்கான மைல் தூரம் உள்நாட்டிலே அரேபியர் சென்று, வியாபாரம் செய்துவந்தனர். அவர்களின் வியாபாரக் கப்பல்களோ சீனக் கடல்வரையில் செல்லலாயின. இவ்விதம் கீழ் நாடு, மேல்நாடு இரண்டு இடங்களிலும் சென்று வந்ததனுல், எங்

கும் நிகழும் செய்திகளை உலகிலே பரப்பும் சௌகரியம் அரேபியர் அடைந்திருந்தனர்.

மேலும், ஈடும் எடுப்பும் இல்லாத கட்டடமொன்று அரேபியாவிலே உண்டு. உலகின் நானு பாகங்களிலிருந்தும் யாத்திரிகர் வந்து, அக்கட்டடத்தைத் தரிசித்துப் போவர். அந்நாளில் அரேபியர் பற்பல வகுப்பினராகவும் பிரிவினராக வும் வேறுபட்டுக் கிடந்தனர். அவர்கள் சதா தம்முள் சண்டையிடுவார்கள். ஆகவே, ஒரு மனங்கொண்ட ஜன சமூகம் என்று அவர்களை அழைப்பதற்கு இடமில்லை.

## தீர்க்கதரிசியின் தோற்றம்

அங்ஙனம் இருக்கும் நாளிலே (அதாவது 1300 ஆண்டு களுக்கு முன்னம்) அரேபியமக்கள் அனைவரின் மனத்தை யும் கவரும்படியான தெய்வத்திருவாக்கொன்று கிளம்பிற்று. உடனே அவர்கள் பரவசமானார்கள். ஆனதும் பற்பல வகுப்பினரும் பிரிவினரும் தம்முள் சண்டையை விடுத் தனர்; ஒருமனங்கொண்டனர், புதிய பிறப்புக்கொண்ட மக்கள் போலவுமாயினர்.

அத்திருவாக்கு அரேபியாவில் மட்டுமே எழுந்தது என்பதில்லை. ஆசியாவின் கீழ் கோடியான காண்டன் என்ன, ஆபிரிக்கா கண்டமென்ன, ஐரோப்பாவிலே பிரான்ஸ் என்ன, ஆகிய எல்லா இடங்களிலும் பிரதிபலித்தது. உல கிலே அத்திருவாக்கின் எதிரொலி கேளாத இடமில்லை. எனவே, பாருலகில் அத்திருவாக்கினால் புதிய சகாப்தம் ஒன்று உதயமாயிற்று, என்றே சொல்லவேண்டும். எப்படி என்றால் மானிடகோடிகள் புதிய செய்தியொன்று கொண் டனர். தாகத்தால் தவிப்பவன் தண்ணீரைக் கண்டதும் ஆர்வமுடன் பருகுவான் அல்லவா? அங்ஙனமே, நற்செய்தி யொன்றில்லாது நலிந்துகிடந்த மானிடர் அனைவரும் அத் திருவாக்கினை ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டனர். கொள் ளவே, புதிய பிறவிகொண்ட மக்கள்போல் மகிமையும் பெருமையும் எய்தலாயினர்.

நம்பெருமானுர் முஹம்மத் முஸ்தபா ரசூல் (ஸல்.) அவர்களே அத்திருவாக்கை வெளிப்படுத்தியவர்கள். அவர்கள் அரேபியருக்குமட்டும் மதபோதகர் என்பதில்லை; மேற்கூறு உலகினுக்கே ஒப்பற்ற போதகராவார்கள். அவர்களுக்கு முன்னம், உலகிலே பல தீர்க்கதரிசிகள் தோன்றியுமென்ன? ஒவ்வொரு தீர்க்கதரிசியும் ஒவ்வொரு வர்க்கத்தாருக்கே பொருந்திப் பயன்படலாயினர். பெருமானுர் (ஸல்.) அவர்களோ உலகமக்கள் யாவருக்கும் நபியாகத் தோன்றி, ஜாதி கர்வம் எனும் குறுகிய நோக்கத்தின் அடிவேர் சிறிதும் காணப்படாது கெல்லி எறிந்துவிட்டார்கள்.

## தொல்லை தீரும் வழி

இருபதாம் நூற்ருண்டு இப்போது நடந்துவருகிறது. இருபதாம் நூற்ருண்டு என்ருல், பலர் பெருமையாகக் கொள்வர். எனவே இன்று எங்குமுள்ள நிலைமை யாது? தற்காலம் நமக்குள்ள தொல்லைகளை யாரேனும் முன்னறிந்து உரைத்துளரா, உரைத்திருப்பின், அத்தொல்லைகளெல்லாம் தீர வகை செய்துளரா? என்றும் நாம் நன்ருக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இன்ரு எங்கும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் போராட்டம், பிழைப்புக்கும் திண்டாட்டம். இங்ஙனம் உலகில் முட்டுப்பாடு நேருமென்பதையும், அதனுல் புரட்சிகள் தோன்றும் என்பதையும் நம் பெருமானுர் முஹம்மது நபி (ஸல்.) முன்னதாகவே நன்குணர்ந்தார்கள். ஆதலின், அதனைத் தடுப்பதற்குரிய வகை துறைகளையும் உரைத்துள்ளார்கள். அப்பெருமானுர் சொற்படி நடப்பின், மனித வர்க்கத்தின் தொல்லைகள் தீரும், உலகமும் இன்பமயமாய் இருக்கும்.

## வட்டி ஆகாது

இன்று உலகத்திலே மிகப்பெரிய சாபத்தீடாக இருப்பது அநியாய வட்டியாம். மூலதனத்திற்கு வட்டியும், வட்டிக்கு வட்டியும் வாங்குவதால், தாங்கமுடியாத வரிப்பளு, பண முட்டுப்பாடு. அதனுல் மனிதகோடிகள் வருந்துகின்ற

னர். ஆதியிலே பண்டத்துக்குப் பண்டம் கொடுத்து மாற்றும் வழக்கம் இருந்தது. இப்போதோ பணமே கொடுத்து வாங்க வேண்டும். எனவே சிலமக்கள் பணமே பிரதானமாகக் கருதினர். அம்மக்கள் பணத்தைக் கடன் கொடுத்து அதற்கு அதிக வட்டி வாங்கலாயினர். கடுவட்டி கொடுக்க முடியாததனுல் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாழாகிவிட்டார்கள். தவிர, உலகெங்கும் சிறைச்சாலைகளிலே கடன்காரர்களும் நிரம்பிக் கிடக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக ஒரு சிலரின் கையில் பணம் குவிந்து கிடக்கின்றது. அதனுல் அச்சிலர்மட்டும் போக போக்கியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். ஏழைகளோ பசியால் வாடி வதங்குகிறார்கள். இத்தீமைக்கு ஆணிவேர் போன்றது வட்டியேயாம். அவ்வேரைக் களைவதுபோல் வட்டி கூடாதென்றார்கள் நம்பெருமான் நபிகள் திலகம் (ஸல்.).

முஸ்லிம்கள் எங்கே சென்ற போதிலும், வட்டி ஆகாது ஆகாது, என்பதே அவர்களின் கொள்கை. மற்றையோரும் அங்ஙனமே நடந்திருப்பராயின், சொல்லவொண்ணாத துயரம் உலகிலே தோன்றியிராது. முன்னம் மிகப்பெரிய ஐரோப்பிய யுத்தம் நடந்ததல்லவா? சேனைச் செலவென்றும் தளவாடச் செலவென்றும் கோடிக்கணக்கில் பணச் செலவாயிற்று. எத்தகைய நிபந்தனையானுலும் சரி, கிடைத்தால் போதுமென எல்லாத் தேசங்களும் கடன்வாங்கின. அதனுல் உலகம் இன்று இருவகையில் கஷ்டப்படுகின்றது. ஒன்று என்னவென்றால், அநியாய வட்டி வாங்குவோரின் கடனைத் தீர்ப்பதற்கான தாங்கமுடியாத அதிகவரி; மற்றொன்றோ பண்டமாற்றலுக்கு மிகவும் அவசியமான பணம் தட்டிவிட்டதால் வியாபார மந்தம்.

## ஏகபோக உரிமை ஏன்?

தர்மமூர்த்தியான நம் பெருமானர் (ஸல்.) அவர்கள் மற்றொரு பெரிய தீங்கைப் போக்கவும் வழிகாட்டியுள்ளார்கள். **“ஏகபோக உரிமை கொள்ளுதல் இஸ்லாத்துக்கு விரோதம்”** என்பது அவர்களது அமுதவசனங்களில் ஒன்று. சந்தையி

லே பண்டங்களைத் தனி மனிதனோ ஒரு சிலரோ வாங்கிக் குவித்து, விலையை வேண்டுமென்று ஏற்றி, சரக்குக் கிடைக்காது போகும்படிச் செய்தல் தீமை; அத்துடன் பாவமும் ஆகும். இஃது அவர்களுடைய கண்டிப்பான ஆணை அல்லவா? தங்கள் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்று தேசங்களெல்லாம் காப்பு வரி அல்லது எதிர் வரி விதித்துள. இதன் பலன் என்ன? ஆலை முதலாளிகள் அடிக்கடி ஒன்று சேர்ந்து, சரக்குகளைத் தேக்கி வைத்து, விலையை ஏற்றி விட்டு, ஏகபோகமான உரிமை எய்துகின்றனர். இதனாலும் மனித வர்க்கம் இன்று மாழ்கின்றது. எனவே, நம்பெருமானார் (ஸல்.) சொல்லியுள்ள வழியைப் பின்பற்றினால், உலகிலே பொருளாதாயத் தொல்லை தொலையும், மானிட வர்த்தகத்துக்கு ஆறுதல் பிறக்கும்.

தர்மமூர்த்தியான பெருமானார் (ஸல்.) அவர்கள் சொல்லியுள்ளது இவ்வளவுதானோ? முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கொடுத்து தீரவேண்டிய 'ஜக்காத்' எனும் வரி ஒன்றுளது. அந்த வரியை நன்கு வசூலித்து நிர்வகித்தால், உலகிலே வறுமையை ஓட்டிவிட முடியும். பணக்காரர் மட்டும் கணக்குப்படி கொடுத்தாலே அவ்வரிப் பணம் ஏராளமாகக் குவியும். இவ்வாறே எல்லா முஸ்லிம்களும் கொடுப்பதானால், அதனைக் கொண்டு ஏழை எளியவரின் கஷ்டங்களைப் போக்கி, எல்லாரையும் கஷ்டமில்லாது வாழும்படி செய்துவிடலாம்.

தர்மமூர்த்தியின் பேரறிவை என்னென்று புகழ்வது? தொழிலாளியின் தொல்லைகளை எல்லாம் அப்பெருமானார் (ஸல்.) நன்கு அறிந்தவர்கள். ஆதலின், "உழைப்பினால் உண்டான வியர்வை உலருமுன், தொழிலாளியின் கூலியைக் கொடுத்துவிடு" என்று அவர்கள் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். இன்னும், தொழிலை அவர்கள் வெகு உயர்வாகவே மதித்துள்ளார்கள். எனவே தொழிலாளரின் ஆதித்தலைவர் நம்பெருமானே. தொழிலாளருக்குத் தலைமை வகிப்பதை ஒரு தொழிலாகக் கொண்டுள்ள அனைவரும் அவர்களிடமிருந்து நல்ல பாடம் கொள்ளலாகும்.

## அடிமைகளுக்கு விடுதலை

ஆடு மாடுகளைப்போல் மனிதர்களை விலைக்கு வாங்கும் வழக்கம் முன்னம் பல நூற்றாண்டுகள் வரையில் உலகிலே பிரபலமாயிருந்தது. அடிமைக்கு விடுதலை அளித்தல் வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திட்டமாகக் கூறும் வரையில், அடிமைகளை விடுவிக்க வேண்டுமென யாரும் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கும் வசனத்தின் சாரம் ஈதாகும்:- "நீ உண்ணும் உணவையே அடிமைகளுக்கும் அளிப்பாயாக; நீ உடுப்பது போலவே அவர்களுக்கும் ஆடைகள் கொடுப்பாயாக; அவர்கள் சக்திக்கு மிஞ்சிய வேலை அவர்களுக்குக் கொடாதிருப்பாயாக''.

முன்னம் யுத்தக் கைதிகளை அடிமைகளாகக் கொள்ளுதல் வழக்கம். எங்கும் அவர்களுடைய பாடு சொல்லி முடியாது; ஒரே துன்பந்தான். காருண்யமூர்த்தியான நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அடிமைகளுக்கு விடுதலை வேண்டுமென்று மனங் கரைந்து மொழியலானார்கள். அதன்பின், இஸ்லாமிய தேசங்களிலே அடிமைகளின் வமிசத்தார் அரச பரம்பரையினராக இருந்திருக்கின்றனர். இந்த விஷயத்தில் உலகினுக்கு ஓர் உயர் வழி காட்டினார்கள் அக்கருணை வள்ளல். ஆயினும் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலே நடந்ததென்ன? அதற்குப் பின் பற்பல நூற்றாண்டுகள் வரையில் அடிமைகளின் விடுதலையைப் பற்றிப் பேசுவாரே இல்லை. பல்லாண்டு கழிந்த பின்னரே அடிமைகளின் விடுதலையைப்பற்றி இரண்டொருவர் பேசத் தொடங்கினர். மேனாடுகளில் இப்பொழுது அடிமைகளே அடியோடு கிடையாது. காரணம் அக்கருணை வள்ளல் அவர்களின் போதனையைப் பின்பற்றிப் பலர் நடந்ததேயாகும்.

மனிதசுபாவம் அப்பெருமானுக்கு நன்கு தெரியும். எக்காலும் நிலைக்கும்படியான சட்டமொன்று செய்தாலொழிய மானிடர் அலட்சியமாக இருந்து விடுவர். ஆத

வின், அடிமைகளுடன் விவாக சம்பந்தம் கொள்ளச்செய்து அடிமைகளின் அந்தஸ்தை அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் உயர்த்தலானார்கள். இன்றோ, உலகிலே எங்கும் ஜாதி, வகுப்பு எனும் பிரிவு பிரமாதமாயுளது. அநேகமாக மக்கள் அனைவரும் தங்கள் ஜாதி அல்லது வகுப்புக்குள்ளேயே விவாக சம்பந்தம் கொள்ளுகின்றனர். நமது உலகரக்ஷகர் பெருமானார் (ஸல்.) அவர்கள் அந்த அடிமைகளின் நிலையை உயர்த்தினார்களாதலின், இஸ்லாம் மதத்திலே ஜாதி, வகுப்பு எனும் வேற்றுமைகள் கிடையா.

குலப்பெருமை, கோத்திர கருவம் என்பதை நம்பெருமானவர்கள் (ஸல்.) வேருடன் களைந்தெறிந்தார்கள். எங்ஙனம் என்றால், "பரம்பரை பரம்பரை என்று தற் பெருமை கொள்ளற்க. நாம் அனைவரும் ஆதமின் மக்கள்" என்பது அவர்களது திவ்யவசனங்களில் ஒன்று. ஒரு நீக்ரோ வானவன் அரபிக்குச் சமானம் என்பதை அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் நடை முறையில் காட்டுவித்தார்கள். அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் காலத்திலே ஒரு நீக்ரோவாசியான பிலால் என்பவர் தினம் தொழுகைக்கு முஸ்லிம்களை தமது இனிய குரலில் அழைப்பார். முஸ்லிம்கள் அனைவரும் அக்குரல் கேட்டு, பயபக்தி விசுவாசத்துடன் தொழச்செல்வர்.

## சமூக நலமே பெரிது

உலகமக்கள் அனைவரையும் ஒருமைப்படுத்த வேண்டுமென இன்று பலரும் முயலுகின்றனர்; அதற்காகச் "சர்வதேச சங்கம்" என்று ஒரு சங்கமும் அமைத்துளர். அச்சங்கத்தின்மூலம் ஒருமனப்படுத்தலென்பது இயற்கையான முறையன்று. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களோ தங்களது அமுத வாக்கினால் மானிட வர்க்கத்தையே ஒருமைப்படுத்தலானார்கள். அவ்வசனத்தின்படி நடப்பின், தனிப்பட்ட தேச நலம் என்பது தீரும்; சாதி வகுப்பு பேதம் அகலும். இவ்வித முறையினால் மானிடவர்க்கம் முழுதும் ஒரேஜன சமூகம் என்பதாகும்.

## சமரஸமே சிறந்தது

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் அமுத வசனம் போதிப்பது யாது? தனிப்பட்ட ஒரு தேசத்தின் நலத்தையே மதித்தல் போதும் என்பதன்று; மனித சமூகத்தின் நலத்தையே மதிக்கவேண்டும் என்பதாம். இதுவே அச்சாணி போன்றது. உலகிலே மிகவும் நல்லவன் யாவன் எனின், மனித வர்க்கத்துக்குப் பெரு நன்மை புரிபவனே என்பது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருவாக்கு. எனவே புதிய கோட்பாடொன்றை அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் சுட்டிச் சொல்லியுள்ளார்கள். அவ்விதம் பெருமானார் (ஸல்.) அவர்கள் புகன்றதை ஆபிரிக்கர், ஆசியாக்காரர், ஐரோப்பியர் இவர்கள் ஒப்புக்கொள்ளும் முன்பே, முஸ்லிம் சமூகம் கிளம்பி, உலகெங்கும் சென்று ஆங்காங்கே குடியேறி, அப்போதனையை பரப்பாநின்றது. உதாரணமாக முஸ்லிமல்லாதாரை முஸ்லிம்கள் பகைக்க ஒண்ணாது. மற்று, அந்த முஸ்லிமல்லாதார் இஸ்லாத்தில் சேர்ந்து உலக சகோதரத்துவத்தில் ஓர் அங்கமாக வேண்டுமென்று முஸ்லிம்கள் அழைத்தல் வேண்டும்.

## பெண்கள் பெருமை

பெண் குழந்தை பிறத்தல் மானக்கேடு என்பதாகப் பல சாதியார் எண்ணிக் கிடந்தனர். அதனால் சிலரோ தங்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்கலாயினர். மற்றுஞ் சிலரோ அக்குழந்தைகளுக்குப் பெயரும் இடாமல் கொடுமையாக நடத்திவரலாயினர். மாதரின் உரிமைகளுக்காக மார் தட்டி நின்ற முதல் மகிமையாளர் நமது திரு நபியவர்களே. பெண் குழந்தைகளைத் தொந்தரை செய்யக்கூடாதென அப்பெருமான் ஆணையிட்டார்கள். அனாதைக் குழந்தைகளை இரட்சித்தார்கள். அவர்களுடைய காலத்திற்கு முன்பு, மாதரை வெறுத்து நடத்தினர் பலரும். இதுபற்றித் திருகுர் ஆன் என்ன சொல்லுகிறது? "உங்கள் மனைவியரை மிஞ்சி உங்களுக்கு உரிமைகள் உள; அங்ஙனமே

உங்களை மிஞ்சி உங்கள் மனைவியர்க்கும் உரிமைகள் உண்டு." கடைசியாகத் தங்கள் ஜனங்களுக்கு அக்கருணை வள்ளல் போதித்ததில் என்ன சொன்னார்கள்? அடிமைகளின் விஷயமாய் உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யுங்கள் என்றார்கள். மேலும், "பெண்களின் உரிமைகள் பழுதுபடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்றும் கூறியுள்ளார்கள்.

1350 ஆண்டுகளுக்கு முன்னமேயே பெண்களுக்குச் சொத்துரிமை அளித்துளது இஸ்லாம் மார்க்கம். ஆயினும் இங்கிலாந்திலோ மணமான பெண்களின் சொத்துரிமைச் சட்டம் 1881-ஆம் ஆண்டில்தான் ஏற்படலாயிற்று. எனவே இங்கிலாந்து தேசம் இஸ்லாத்தினிடமிருந்து அவ்விஷயத்தில் கடன் வாங்கியுளது. வார்சு உரிமையை நன்கு வரையறுத்துளது இஸ்லாம் மார்க்கம். எப்படியென்றால் ஆண் பெண் இருவருக்கும் சொத்தில் பங்குளது. பல நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் இந்த விஷயத்தில் இஸ்லாத்தைப் பின்பற்றலாயிற்று ஐரோப்பாக் கண்டம். இன்றும் சரி, சொத்துரிமை விஷயத்தில் இஸ்லாமிய சட்டத்திற்கு ஐரோப்பிய சட்டம் ஒருபடி தாழ்ந்ததுதான். எங்ஙனம் என்றால், மனைவியர்க்கும் மக்களுக்கும் சொத்தைக் கொடுக்காமல், அன்னியருக்குச் சொத்தையளிக்க ஐரோப்பிய சட்டம் இடந்தருகின்றது. இஸ்லாமிய சட்டத்தின்படியோ என்றால் ஒருவன் தன் குடும்பத்தை அனுதரவுசெய்யும் முறையில் வஸியத்துச் செய்வதற்கு முடியாது, காத்தேதீரவேண்டும். தன் இஷ்டப்படி அவன் நடக்க ஒண்ணாது. குடும்பத்தைப் பாதுகார்த்தல் கடமையாகும். எனவே உலகமாதர் அனைவரும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பெரு நன்றி செய்யக் கடமைப்பட்டுளர். மாதரின் கதிமோட்சத்துக்கு அவர்களே மூல புருஷர். ஆதலின் அவர்கள் அனைவரும் இஸ்லாத்தைச் சிறிதாவது ஆராய்ந்தறிந்துகொள்ளுதல் வேண்டும்.

## வர்த்தகச் சிறப்பு

மனித சுபாவத்தில் பல கேவலங்கள் உண்டு. வர்த்தகம் புரிவோரைக் கண்டால் சிலருக்கு இளப்பந்தான். நமது

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே வியாபாரியாக இருந்தவர்கள். எனவே வர்த்தகத்துக்கு அவர்கள் பெருமை கொடுத்துள்ளார்கள். தற்கால வர்த்தகர் அப்பெருமானிடமிருந்து நல்ல வடிப்பினை கொள்ளலாகும். பெருமானவர்கள் மிக்க ஜாக்கிரதையாகவும் லாபகரமாகவும் வியாபாரம் நடத்திவந்தார்கள். ஜன சமூகத்துக்கு வர்த்தகர் இன்றியமையாதவர்கள். வர்த்தகரின் முயற்சி இன்றேல், மனிதவர்க்கம் பசித்து வாடிப் பதைக்கவேண்டும். எனவே வியாபாரம் பெருமையான தொழிலாகும். மானிட வர்க்கத்தை ஈடேற்ற வந்த தீர்க்கதரிசிகளில் கடைசி புருஷரும் மகா சிறப்புற்றவர்களுமான திருநபியவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பதாக வர்த்தகர் அனைவரும் எண்ணுவார்களாக.

## குடும்பக் கடமை

குடும்ப வாழ்விலும் நமக்கு ஒரு வழிகாட்டி வேண்டும். அதற்கு நம்பெருமானர் (ஸல்.) அவர்களே உதாரண புருஷராவர். அவர்கள் மணம்பூண்டு, கணவராயிருந்து, கணவர் மனைவியருக்குள்ள உருக்கமான பாசத்தை நன்கு அறிந்தவர்கள். அவர்கள் பல குழந்தைகளின் தகப்பனாராகவும் இருந்தார்கள். எல்லாக் குழந்தைகளிடமும் அன்பு பூண்டிருந்தார்கள். குழந்தைகளும் அவர்களிடம் பிரிதிகொண்டிருந்தனர். இளவயதிலே தாயையும் முன்னமே தந்தையையும் அவர்கள் இழக்கநேர்ந்தது. ஆதலின் அனாதைக் குழந்கைளின் நிலையை அவர்கள் நன்கறியலானார்கள். எனவே அனாதைக் குழந்தைகளிடம் அன்புகாட்டவேண்டுமென அவர்களது அமுத வசனங்களிலெல்லாம் பார்க்கலாம். அனாதைக் குழந்தைகளின் நலங்கருதி அவர்கள் பல வழிகளும் செய்திருக்கிறார்கள். அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றுதல் முஸ்லிம்களின் பரம கீர்த்திகளில் ஒன்றாகும். இன்று அனாதை ஆச்சிரமங்களில் உள்ள சின்னக் குழந்தைகள் எல்லாம் அரேபியாவின் தீர்க்கதரிசியிடம் நன்றிகாட்டுதல் வேண்டும்.

## பரமநீதிமான்

சொத்தின் வார்சு உரிமையைக் குறித்துச் சிறிது முன்னம் சொன்னோம். திருகுர்ஆனிலே மக்களின் சன்மார்க்திற்குரிய விதிகள் பல உள. அவை இருக்க, நம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் மகாநீதிமான் என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். ஆகவே முஸ்லிம், முஸ்லிமல்லாதார் ஆகிய இருவருக்கும் அப்பெருமான் (ஸல்.) நடுக்கண்ட நியாயமான சட்டஞ்செய்த புண்ணியர்.

மதீனா நகரிலே முஸ்லிம்கள்மட்டுமின்றி, யூதர் முதலிய பிறரும் வசித்திருந்தனர். அவர்களை ஆண்டு வருகையில், எல்லாரும் ஒப்ப அவர்கள் சட்டதிட்டம் செய்துள்ளார்கள். அவர்கள் நீதிபதியாகவும் விளங்கினார்கள். கணக்கற்ற வழக்குகள் அவர்களுடைய தீர்ப்புக்கு வரும். எல்லாரும் அப்பெருமானிடம் மிக்க மதிப்புக்கொண்டிருந்தனர். ஆதலின் யூதரும் பிறரும் அவர்களது தீர்ப்பின் நேர்மையும் சீர்மையுங் கண்டு அவர்களையடைந்து, தங்களது வழக்குகளையும் சச்சரவுகளையும் தீர்த்துவைக்க வேண்டிக்கொண்டனர். ஜட்ஜிகள் என்ன, மாஜிஸ்திரேட்டுகள் என்ன, லாயர்கள் என்ன, ஆகிய அனைவரும் அரேபியாவின் நீதிமானும் சட்ட துரந்தரருமான நம்பெருமானார் (ஸல்.) அவர்களிடமிருந்து பெரும் படிப்பினைகள் கொள்ளலாம்.

## உழைப்பின் உயர்வு

சரீர உழைப்புக்கு நம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு மதிப்புக்கொடுத்துள்ளார்கள். மதீனா நகரிலே கட்டப்பட்ட மஸ்ஜிதுக்கு அவர்களும் உடனிருந்து தங்கள் கைகொண்டு உழைத்தார்கள். ஆதலின் வீடுகளும் மனைகளும் கட்டும் தொழிலில் முனைந்துள்ள அனைவரும் அவ்விஷயத்தைக் கவனித்தல்வேண்டும். அவர்கள் சிற்ப சாஸ்திரியும் ஆவார்கள். புதுமாதிரியான கட்டடங்களை அவர்கள் அமைத்துவைத்தார்கள். முஸ்லிம் நாடுகளில் மட்டுமின்றி இதர நாடுகளிலும் அம்மாதிரியான கட்டடங்கள் எழலாயின.

## மார்க்க சமரஸம்

மதீனு நகரில் எழுந்த பள்ளிவாசலில்தான் கிறிஸ்த வத் தூதுகோஷ்டியொன்று நம்பெருமானைக் காணவந்தது. அப்போது ஆண்டவனைத் தொழவேண்டுமென அவர்கள் விரும்பினர். ஆதலின் எங்கே தொழுவதென நம்பெரு மானைக் கேட்டனர். மார்க்க சமரஸமும் உலக சகோதரத் துவமும் அவசியமென நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் போதித்துள்ளார்கள் அல்லவா? அதனை நடைமுறையில் காட்டுவதுபோல், அவர்கள் தொழுமிடத்தைக் குறிப்பிட் டார்கள். இந்தவகையில், சமயப்பகையும் பொறுமைஇன்மை யும் கணப்பொழுதில் களைந்தெறியப்பட்டன. எனவே இதர எந்தமதத்தின்மீதும் இஸ்லாமுக்குப் பகையுண்டென எவரேனும் சொல்லமுடியுமோ? முடியாது, முடியாது.

## மதுபானம் கூடாது

முன்போலவே இப்பொழுதும் உலகத்தின் பெரிய சாபத்தீடுகளில் மதுபானத்தீமை ஒன்றாகும். நபிகள் நாய கம் (ஸல்.) அவர்கள் தோன்றுமுன்போ, மக்கள் குடியில் மூழ் கிக் கிடந்தனர். அக்குடி வெறியால் பற்பல பெருங்குற்றங் களும் புரியலாயினர். இன்றும் போலீஸ் கோர்ட்டுகளில் பார்க்கலாம். குடிகாரர்களின் மீது வழக்குகள் நிரம்பிக் கிடக் கும். தவிர, குடிகாரணமாகப் புரிந்த குற்றக் கேஸ்களும் ஏராளமாகும்.

அமெரிக்கா ஐக்கியநாட்டு வாசிகளான சிறந்த மக்கள் சட்டத்தின் உதவிகொண்டு குடிப்பழக்கத்தைத் தொலைக்க முயன்றனர். முயன்றுமென்ன? பலன் உண்டோ? சட் டத்தின் பலமும் ஆயிரக்கணக்கான போலீஸாரும் சுங்க அதிகாரிகளும் இருந்தும், குடிப்பழக்கத்தைத் தொலைக்க முடியவில்லை. 1300 ஆண்டுகளுக்கு முன்னே அரேபியா வில் என்ன நடந்தது தெரியுமா?

மதியை மயக்கும் மதுபானம் கூடாதென நம் சன் மார்க்க தூதர் (ஸல்.) அவர்கள் ஆணை தந்தார்கள். தந்தது

தான் தாமதம். மக்கள் அனைவரும் தங்களிடமிருந்த மது பான ஜாடிகளையும் பாத்திரங்களையும் உடைத்தெறிந்து போட்டனர். வீதியெங்கும் மதுபானம் ஆருக ஓடியது. எனவே உலகத்தில் முதன் முதலாக மதுபானத்தை ஒழிக்க முயன்ற சன்மார்க்கதூதர் நம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர் களே யாம். இஸ்லாமல்லாத நாடுகள் மதுபானத்தை ஒழிக்க வேண்டுமென இந்நாளில் எவ்வளவோ முயலுகின்றன. அப் பெருமானே (ஸல்.) ஒரு கணத்தில் அதனை ஒழித்துப்போட் டார்கள். இன்றும் சரி, முஸ்லிம்கள் வசிக்கும் இடங்களி லெல்லாம் லட்சோப லட்சக்கணக்கான அங்கத்தினரைக் கொண்ட மகத்தான மதுவிலக்குச் சங்கங்கள் காணப்படும். இந்த விஷயத்திலும் லட்சோப லட்சக்கணக்கான குடும்பங் களுக்கு ஆனந்தம் தேடித் தந்தவர்கள் நம்பெருமானார் (ஸல்.) அவர்களேயாம். மேலும் மதுபானத்தினால் நேரும் இகழ்ச் சியினின்றும் முஸ்லிம்களை அவர்களே காத்தளித்தார்கள். ஐரோப்பாவும் சரி, அமெரிக்காவும் சரி, என்றைக்காயினும் மதுபானத்தை ஒழிக்குமாயின், அவ்விரு தேசங்களும் நபி கள் நாயகம் (ஸல்.) அவர்களின் வழியைப் பின்பற்றியன வாகும். தவிர, நம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு கட மைப் பட்டனவுமாகும். உலக ஜனசமூகத்தை அரித்துக் கொண்டிருக்கும் குடிப்பழக்கம் என்பதை முஸ்லிம் உலகில் காணமுடியாது.

## சூதாட்டம் தொலைய

மானிடகோடிகளை வாட்டிவரும் மற்றொரு சாபத்தீடு சூதாட்டமாம். ஆதிகாலந்தொட்டு மானிடர் சூதாடி, ஆஸ்தி யையும் அடிமைகளையும் தங்கள் மனைவியரையுங்கூட இழந் துளர். சுகபோகங்களுடன் வாழ்ந்து வந்த பெருங்குடும் பங்கள் உண்ணச்சோறின்றி அழிந்தும் போயின. காரணம் குடும்பத் தலைவனாக இருப்பவன் மடமையினால் மனம் மாறி, சன்மார்க்கந் தவறியதேயாம்.

நவீன உலகிலே பங்கு மார்க்கெட்டுகளில் எவ்வளவு சூதுவாது நடக்கிறது தெரியுமா? ஒரு நாளில் மலைபோல்

செல்வம் குவிகின்றது, மறுகணமே அத்திரண்ட செல்வம் இருந்தவிடம் தெரியாமல் போகின்றது. அதனால் நடக்கும் தற்கொலைகளுக்கு ஒரு கணக்கு உண்டோ? இது யாருக்குத் தெரியாது? கம்பெனிகளின் பங்கு விலைகளை வேண்டுமென்று உயர்த்துவதாலும் குறைப்பதாலும் எத்தனையோ குடும்பங்கள் துக்கசாகரத்தில் ஆழ்கின்றன; கரைகாணுமலும் தவிக்கின்றன.

குதிரைப் பந்தயத்தில் கோடானுகோடி காசு போவது உலகிலே எங்கும் சகஜமாயுளது. குதிரைப் பந்தயமேடைகளில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடுவதின் காரணம்யாது? குதிரைகளின் நடை கண்டு களிக்கவா? அன்று அன்று. பணத்தைக்கட்டிலாபம்பெறவேயாம். லாபம்வந்தால்ஆனந்தந்தான்; இல்லாவிட்டாலோ வாடிய முகந்தான். சட்டங்கள் இயற்றி அச்சூதை அடக்க அரசாங்கங்கள் முயன்று வருகின்றன. சட்டங்கள் இயற்றியிருப்பதிலிருந்தே பணங்கட்டுதல் தீமை என்பது புலப்படுகிறதல்லவா? என்ன சட்டஞ் செய்துமென்ன? குதிரைப்பந்தயங்களில் பணங்கட்டுதல் ஒழிந்துளதோ? இல்லை, இல்லை. எத்தனையோ மோசமான முறைகளில் அது இன்றும் நிகழ்ந்து வருகின்றது. சட்டங்கள் பயனற்றுப் போய்விட்டன.

நம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சீர்திருத்த மகனீயர். அப்பெருமானைப் போன்ற சீர்திருத்தக்காரரைக் காண்பது அரிது, அரிது. ஆதலின், சூதென்னும் தீமை கண்டு இஸ்லாம் மார்க்கம் சும்மா இருக்குமோ? அரேபியாவிலே பலவாறான வழிகளில் முன்னம் சூதாட்டம் நடந்து வந்தது. அரேபியரோ சூதாட்டத்தில் மகாமோகம் கொண்டிருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஆணை இட்டவுடனே, எந்தவிதமான சூதாட்டமும் அங்கே தொலைந்தது. இன்றேறு முஸ்லிம்கள் எந்தவிதமான சூதினும் ஈடுபடாமல் விலகியே இருப்பர். இதனால், கோடிக்கணக்கான மக்களுக்கு அதிர்ஷ்டமும் சுகவாழ்வும் கிட்டலாயின.

சூதாட்ட விஷயமாய் இஸ்லாம் இட்டுள்ள கட்டளை களுக்கு என்றைக்காயினும் ஒருநாள் உலகம் இணங்கியே ஆகவேண்டும். சட்டங்களால் சாதிக்கமுடியாத காரியங்களை மார்க்கக் கோட்பாடுகளினால் சாதித்துக்கொள்ள முடியும். மெய்யான மார்க்க போதத்துக்கு எவ்விதத்திலேனும் சட்டம் ஈடாகுமோ? மார்க்க விதி யென்பது சிருட்டி கர்த்தா வான ஆண்டவன் இட்ட கட்டளையாகும். சட்டம் என்பதோ கேவலம் பக்குவமில்லாத மானிடர் செய்வதாம். ஆண்டவன் ஆணை என்றால் அனைவரும் அஞ்சுவர். பக்திவிசுவாசமும் கொள்வர். மனிதன் செய்த சட்டத்துக்கு அவ்வளவு மதிப்பு இராது. ஆதலின், உலகத்திலே ஜனசமுகத்தை நாசமாக் கிக் கொண்டிருக்கும் பற்பல தீமைகளை அறவே ஒழிக்க இஸ் லாம் மார்க்கம் வழிகாட்டுகிறது. இஸ்லாம் மார்க்கம் பரவி யிராத தேசங்கள் எல்லாம் இஸ்லாத்திலிருந்து நல்ல படிப் பினை கொள்ளக்கூடும். சூதினால் சொல்லமுடியாத தீமை கள் நேருவதை பல ஜனசமூகங்கள் அறிந்திருந்தும், அவற் றை போக்கத் தங்கள் சன்மார்க்கத்தில் வகையில்லாது தவிக் கின்றன. அத்தகைய சமூகங்களுக்கு இஸ்லாம் ஓர் ஊன்று கோல்போல் உதவும்.

## ஜீவ ஹிம்சை ஒண்ணாது

ஆடு மாடு குதிரை முதலிய ஜீவன்களுக்கு நேரும் ஹிம்ஸையைத் தடுக்கும் நோக்கதுடன் இன்று மேனாடு களிலே பல சங்கங்கள் உள. ஆதலின் மிருகங்களின் விஷயமாய் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய விதத்தை வரையறுக்க விதிகள் அவசியம் என்று ஏற்படுகிறதல்லவா? இந்த இருபதாம் நூற்றாண்டிலே அத்தகைய சங்கங்கள் அவசியமாயிருத்தல் ஆச்சரியத்தினும் ஆச்சரியமேயாம். நாகரிகமுள்ள மக்கள் எனப்படுவோருக்கு அது மாசு போலாகும். பிராணிகளின் விஷயத்தில் இன்னவாறு மனி தன் நடந்துகொள்ள வேண்டுமென இஸ்லாம் மார்க்கத்திலே திட்டமான விதி முறைகள் உள. கருணைக்கடலான முஹம் மத் நபி (ஸல்) யாது கூறியுள்ளார்கள்? "வாயில்லாப் பிரா

ணிகளைக் காணுகையில், ஆண்டவன் இருக்கிறான் என் றெண்ணி அஞ்சி நட. சவாரிக்கு லாயக்கானது என்று தெரிந் தால்தான், மிருகங்களின்மீது சவாரி செய்யலாம்.'' இஃது அக்கருணை வள்ளலின் அமுத வாக்கு.

ஒரு மனிதன் தன்னிடமுள்ள பிராணிகளுக்கு நன்கு தீனி போடாவிடின், அவன் சொத்துக்களைப் பறித்து, அவற் றின் விலை கொண்டு, பிராணிகளுக்கு உணவூட்ட ஜட்ஜிக ளுக்கு அதிகாரம் உண்டென்பது திருநபியவர்களின் (ஸல்) வசனமாகும். மிருகங்களைப் பட்சமாக நடத்த வேண்டும் என்பதாக நம் பெருமானார் அவர்களின் திருவாக்கியங்களில் பல இடங்களிலும், இஸ்லாமிய சரித்திரங்களிலும் பார்க்க லாம். "உயிருள்ள பிராணிக்கு உணவு ஊட்டுவதில்கூட ஆண்டவனிடமிருந்து சன்மானம் கிடைக்கும்.'' என்பது ஒரு வசனம். எனவே மிருகங்களைப் பற்றியும் நம் பெருமா னார் (ஸல்) அவர்கள் சட்டம் செய்திருக்கிறார்களென்பது வெளிப்படை. இந்த உண்மையை மேனாடுகள் உணருவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழி செய்துள்ளார்கள் என்பது கவ னிக்கத்தக்கதாம். எந்த வகையான உயிர்களுக்கும் எல்லா வழிகளிலும் விதிமுறை வகுத்திருப்பதில் இஸ்லாம் மார்க்கத்திற்கு இணை உண்டோ? என்ன ஆச்சரியம் பாருங்கள்!

## பிறர்மீது வாஞ்சை.

மிருகங்களின் நலங்கருதி விதிமுறைகள் வகுத்திருக் கும் இஸ்லாம் மார்க்கத்தில், பிறர்மீது வாஞ்சை கொள்வது பற்றி விதிமுறைகள் இல்லாதிருக்குமோ? பிறரிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதற்குள்ள அழ கான விதி முறைகள் உள. அவற்றை எல்லாம் இங்கே விரித் துரைத்தல் இயலாத காரியம். ஆயினும் இரண்டோர் மேற் கோள் மட்டும் காட்டுவோம். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமுத வசனங்களில் சில இவையாம்.

தான் மட்டும் வயிறார உண்டுவிட்டுப் பிறர் பசித்திருக்கப் பார்ப்பவன் பூரணமான முஸ்லிம் ஆகான்; தன்னைப் போலவே பிறனும் சுகமாக வாழவேண்டும் என்று விரும்பாதவன் மெய்யான முஸ்லிம் ஆகான்; எத்தகைய செயல்கள் மகா சிறந்தவை? ஒரு மனிதன் மனதுக்குச் சந்தோஷம் ஊட்டுதல், பசித்திருப்போருக்கு அன்னமளித்தல், கஷ்டத்தில் இருப்போருக்கு உதவி புரிதல், துக்கவான்களின் துக்கத்தைத் தணித்தல், பிழை செய்யப்பட்டவர்களுக்குக் குதூகலம் உண்டாக்குதல் முதலியனவே சிறந்த செயல்களாம். ஆண்டவனுக்கு மிகவும் பிரியமானவன் யாவன்? ஆண்டவன் படைத்த உயிர்களுக்கு மிகுந்த நன்மை செய்பவனேயாம்.

## போரிலும் நேர்மை

மீண்டும் மகாயுத்தமொன்று நேருமோ என உலகம் எண்ணிக்கிடக்கிறது. இந்நிலையில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காட்டியுள்ள வழியைப் பார்ப்போம். உலகில் சாந்தியை நிலைநாட்டவேண்டும் என்பதே அப்பெருமான் (ஸல்.) அவர்களது தோற்றத்தின் நோக்கம். ஆயினும் அவர்களோ போர்புரிய நேர்ந்தது. ஏன் என்றால், இஸ்லாத்தை வேரறுக்கவும், முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர் ஆகிய அனைவருக்கும் சொல்லவொண்ணாத் துயரம் இழைக்கவும் கங்கணம் பூண்ட எண்ணிறந்த எதிரிகள் இருந்தார்கள்.

அன்னவரை அவர்கள் அடக்கும்படி ஆயிற்று. தங்கள் நடையால் அவர்கள் பிறர்க்கு வழி காட்டியுள்ளார்கள். அவர்களின் தூய வாழ்க்கையோ நம் அனைவர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். ஆதலின் ஒவ்வொருவரும் அப்பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுதல் நலம். மூர்க்ககுணம் வாய்ந்த விரோதிகள் ஒரு பக்கம், உட்பகையான துரோகிகள் ஒருபக்கம், ஆக இருபக்கத்திலிருந்தும் ஆபத்து ஏற்பட்டபொழுது, மதீனாவாசிகளான முஸ்லிம்கள் முதலியோரை அப்பெருமான் (ஸல்.) அவர்கள் பாதுகாக்க நேர்ந்தது.

எனவே அவர்கள் ஒரு தளகர்த்தராக விளங்கினார்கள். போர்முனையில் சேனையையும் செலுத்தி நின்றார்கள். யுத்தமென்பது மகா பயங்கரமானதுதான். ஆயினும் எளியோரை வலியார் வாட்டாமல் பாதுகாத்தலும், கொடுமையை அகற்றுதலும் அவசியம் அல்லவா?

போரையும் நேர்மையாக நடத்தல்வேண்டுமென அவர்கள் பல விதிமுறைகள் செய்துள்ளார்கள். தற்காலம் தேசங்களெல்லாம் அம்முறைகளைப் பின்பற்றுதல் நலமாம். கொடுமை, துன்பம், இரத்தப்பெருக்கு இவற்றைத் தடுக்கத்தான் போர்புரியலாம். யுத்தகாலத்தில் பயிர் நிலங்கள் பாழாகாமல் பார்க்கவேண்டும். மரங்களை வெட்டித்தள்ளுதல் கூடாது. கிழவர், ஸ்திரீகள், குழந்தைகள் இவர்களுக்குத் தீங்கு செய்ய ஒண்ணாது. எந்த மதகுருவுக்கும் ஆபத்துஇழைத்தல் ஆகாது. யுத்தகாலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் அவை. ஆனால் 1914 முதல் 1918 வரையில் ஐரோப்பியயுத்தத்தில் என்ன அக்கிரமங்கள் நடந்தன.

அப்பப்பா! பசுமையாயிருந்த பயிர் நிலங்கள் சாம்பலாயின, மரங்கள் வெட்டித்தள்ளப்பட்டன; வீடுகளும் மாதா கோயில்களும் வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்டன. ஆண்பெண் குழந்தை அடங்கலின்மீதும் விமானங்களிலிருந்து குண்டுகள் போடப்பட்டன. பசியால் வாடிவதங்கிநின்ற மக்களுக்கு உணவுப்பொருள் கொணர்ந்த கப்பல்கள் கடலில் அமிழ்த்தப்பட்டன. இக் கோரங்களை எண்ணிப் பார்க்கையில், இவ்வளவு கொடுமைக்கும் காரணமாயிருந்த "நாகரிகம்" என்பது அழிந்தால் நலமெனத் தோன்றும். அங்ஙனம் கொடுமைகள் இழைப்பதற்குப் பதிலாக, நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் விதித்துள்ள நியாயமான தர்ம வழியைப் பின்பற்றுதல் மேல் அன்றோ? உலகிலே ஒரு பேராசிரியரான பெர்னார்டுஷா என்பார் கூறிய வண்ணம், "முஹம்மதைப் போல் (ஸல்.) உலகினுக்கு ஒரு ஸர்வாதிகார புருஷர் தேவை."

## ஸர்வாதிகார நேர்மை

ஐரோப்பாவில் பற்பல ராஜ்யங்கள் தோன்றி மறைந்துள. ஜனநாயக ஆட்சிகளும் பலனனடந்தும் பாழ்பட்டும் போயுள. இப்போதோ சர்வாதிகாரத் தன்மை வாய்ந்த புருஷன் ஏகதேச ஆட்சியே பெரும்பாலும் தலையெடுத்து வந்துளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தை நாம் எண்ணிப் பார்ப்போமானால், முஸோலினி, ஹிட்லர் போன்றவர்களும் அப்பெருமானார் (ஸல்.) அவர்களிடமிருந்து ஒரு பாடம் கொள்ளலாம்.

குலங்களாகவும் வகுப்பாகவும் பிரிந்து கிடந்த மக்களையே அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரு முகங்கொண்ட ஜனசமூகமாக்கினார்கள்; உலகெங்கும் பிரசித்தி பெறும் ஏகாதிபத்தியத்தையும் நிருமாணித்தார்கள்; ஸர்வாதிகார புருஷராகவும் விளங்கினார்கள். அவர்களின் வசனமே சட்டமாக இருந்தது. ஏன் என்று கேளாமல் அனைவரும் அவர்கள் சொற்படி நடந்தனர். அராஜகமும் குழப்பமும் தோன்றியிருந்த இடத்தில் ஒழுங்கையும் சகோதரத்துவத்தையும் அவர்கள் உண்டாக்கினார்கள். மேனாட்டு ஆசிரியரொருவர் கூறும் வண்ணம், தீர்க்கதரிசிகளிலெல்லாம் அவர்களே பெரும்பலன்கண்ட பெருமான். மன்னாதிமன்னராகவும் ஸர்வாதிகாரபுருஷராகவும் விளங்கியபோதினும், மிகவும்சாமானியமான மனிதரைப்போலவே அவர்கள் இருந்துவந்தார்கள். யாவராயினும், பரம கேவல மனிதராயினும், அவர்களை இலகுவில் கண்டு பேசலாம்; தங்களைப் பார்க்க வந்த யாரையும் அவர்கள் தட்டிப் பேசியதில்லை; பார்க்கமுடியாது என்று சொல்லியதுமில்லை. அவர்களைச் சுற்றி ஆயுதபாணிகளான மெய்காப்பாளர் இருந்ததே கிடையாது. நாள்தோறும் மக்களிடையே அவர்கள் தாராளமாகப் பழகி அனைவராலும் நேசிக்கப்பட்டு வந்தார்கள். இப்போது தங்களது தேசமக்களை ஒருமைப்படுத்த வேண்டுமென்றும், தங்கள் மக்களுக்கு சுக வாழ்வளிக்க வேண்டுமென்றும், பலசர்வாதிகார புருஷர்கள் விரும்புகிறார்களே, அவர்கள் அனைவரும் I ஏகத்து

வத்தூதரான நம் பெருமானுர் (ஸல்.) அவர்களிட மிருந்து நல்ல படிப்பினை கொள்ளலாம்.

## உலக சாந்தி தேவை

சாந்தியை எங்கும் நிலவச் செய்யவேண்டுமென்று சிறிது காலமாக உலகில் பெருமுயற்சி நடந்துவருகிறது. அதற்காக அடிக்கடி மகா சபைகளும் கூடி வருகின்றன. சர்வ தேச சங்கமும் ஏற்பட்டுளது. நேசப்பான்மையுடன் யாவரும் கலந்துபேசி, இனி உலகில் மகாயுத்தம் நிகழாவண்ணம் செய்யலாமென்றும், சிலர் சொல்லி வருகின்றனர். அந் நோக்குடன் கூடும் மகா சபைக்கு ஒவ்வொரு தேசத்திலிருந்தும் பிரதிநிதிகள் போகிருர்கள்; பிரமாதமான பேச்சுக்கள் நடக்கின்றன; அந்தோ! ஆயினும் என்ன? மீண்டுமொரு மகா யுத்தம் நேருமென்றே தோன்றுகின்றது.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் அரேபியாவிலே என்ன நடந்ததென்று பார்ப்போம். அங்கே சர்வ தேச சங்கம் உண்மையில் ஏற்பட்டது. அது முதல் ஆண்டு தோறும் அங்கே சர்வதேச மக்களும் மகாசபை கூடி வருகிருர்கள். அதாவது புண்ணிய மக்கமாநகரில் ஆண்டு தோறும் மகாசபை கூடுகிறது. அதற்கு “ஹஜ்ஜு” அல்லது புண்ணிய யாத்திரை என்று பெயர். சமாதானத் தூதரான முஹம்மதுநபி (ஸல்.) காலந்தொட்டு எல்லாத்தேசங்களிலிருந்தும் கோடானு கோடிமக்கள் அப்புண்ணிய மக்கமாநகரஞ் சென்று, சில சடங்குகளிலே அனைவரும் ஒன்றுகூடி, மனங் கலந்துபேசி, சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். பூமண்டலத்தின் நாலு பாகங்களிலிருந்தும் அவர்கள் அங்கே சென்றவர்கள் அல்லவா? அங்கே கூடும் உலக மக்களிடை உள்ள சமரஸம், நேசம், ஐக்கியம், ஒருமை, சாந்தி முதலியவற்றை உலகிலேவேறு எங்கேயாவது காணமுடியுமா?

அப்புண்ணிய நகரிலே முஸ்லிம்களான ஐரோப்பியர், சீனர், மலாயர், நீக்ரோவர், மூர்கள், இந்தியர், பாரசீகர்

முதலிய அனைவரும் ஒரு குடும்பத்தாரைப்போல் தோன்று வதையும், முஸ்லிம்கள் எனும் ஒருமுகமான ஜன சமூக மாவதையும் இன்றும் பார்க்கலாம். அதுவன்றோ உண்மை யான ஸர்வதேச சங்கம்! உலகம் விரும்புவதும் அத்தகைய சங்கத்தையேதான். அந்த மகாநாட்டிலே பணக்காரரும் ஏழைகளும், எஜமானனும் வேலைக்காரனும் ஒரே மாதிரியான ஆடைதரிப்பர். எனவே உலகிலே பலவிடங்களில்தோன்றும் ஆடைவேற்றுமையும் அங்கே இல்லை. அங்கே கூடும் மானிட கோடிகளின் மன நேர்மையை எதுவும் அழிக்கமுடியாது.

பலவாறான தேசமக்கள் அங்கே அங்ஙனம் ஒரே ஜன சமூகமாக ஆவதையும் நிம்மதியான சாந்தி கொள்வதையும் பிறர் பின்பற்றுவார்களாக. அவ்விதம் பின்பற்றின், மகா யுத்தம் எனும் பேச்சே இல்லாதுபோம்; மிருகத்தன அம் சங்கள் மறைந்தொழிந்து போனதேபோல், யுத்தம் என்ப தும் மறைந்தழிந்துபோம். எங்கும் சாந்தி, சமாதானம், நிம்மதி நிலவும்.

## எல்லாரும் சமமே

இஸ்லாம் மார்க்கத்திலே அனைவரும் உயர்வு தாழ்வு இன்றி ஒரே மக்களாவர் என்பது உயர்ந்த லட்சியம். அந்த உண்மையை உலகிலே முஸ்லிம்களிடம் எங்கும் காணலாம். புண்ணிய மக்கமா நகரின்நடுமத்தியில் திருகஅபா உளது. மஸ் ஜிதுகள் என்ன, வீடுகள் என்ன, கடல் யாத்திரையிலே கப்பல்கள் என்ன, உழவு சமயத்திலே வயல்கள் என்ன, ஆகிய எல்லா இடங்களிலும் தொழுகை நேரத்தில் முஸ்லிம் கள் அனைவரும் ஒரே ஒருதாய் வயிற்று மக்கள்போல், ஒரே சோதரர்போல் கூடித் தொழுவதைப் பார்க்கலாம். கஅபா வுக்கு வடக்கே யுள்ளவர்கள் தெற்கு நோக்கித் தொழு வர், மேற்கேயுள்ளவர் கிழக்கு நோக்கித் தொழுவர், தெற்கே யுள்ளவர் வடக்கு நோக்கித் தொழுவர், கிழக்கே யுள்ளவர் மேற்கு நோக்கித் தொழுவர். இப் பூமண்டலத் திலே நாள்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் முஸ்லிம் ஜனசமுகம் ஏககாலத்தில் தொழுகை நடத்திவருகின்றது.

அம்மக்கள் தொகை வரவரப் பெருத்து வருகின்றது. கோடிக்கணக்கான மக்கள் அங்ஙனம் நாள்தோறும் தொழுவதனில், ஆன்மசக்தி, பாரமார்த்திக சக்தி எவ்வளவு தூரம் ஓங்கு மென்பதை யாவரும் சிந்தித்துப்பார்த்தல் வேண்டும். உலகிலே அதற்கு ஈடு ஏதேனும் உண்டோ? ஆபிரிக்காவிலே இஸ்லாம் விரைந்து பெருத்து வருவதைக்கண்டு தென் ஆப்ரிக்காவின் ராஜதந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவர் புகழ்ந்து பேசியுள்ளார். தெய்வம் ஏது எனும் கொள்கை வாய்ந்த பத்திரிகை யொன்றும், இன்னும் நூறு வருஷகாலத்திற்குள் மனித வர்க்கம் அனைத்தும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிவிடும் என்று கூறியிருக்கிறது.

தங்கள் மார்க்கத்தின் பாரமார்த்திகத் தன்மை போய்விடுகிறதே யென்று சிலர் வருந்துகின்றனர். ஆனல், பாரமார்த்திக மூர்த்தியான முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் இந்த உலகில் பரப்பியுள்ள பாரமார்த்திக சக்தி அன்றுபோல் இன்றும் வானுற ஓங்கியே யுளது. அன்றியும் இப்பூவுலகிலே பலரும் இஸ்லாமிய சகோதரத்துவத்தில் கங்குகரையின்றி நாள்தோறும் ஐக்கியமாகி வருகின்றனர். இது திண்ணம், திண்ணம். ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா ஆகிய எந்தக்கண்டத்திலாகட்டும், அங்கு மஸ்ஜிது இருந்தால் அதில் எல்லா முஸ்லிம்களும் தாராளமாக உள்ளே புகலாம்; தொழுகையில் கலந்துகொள்ளலாம்.

முஸ்லிம் உலகில் அரபிபாஷையே பொதுவான பாஷை. அதனல் எத்தேசமக்களும் ஒன்ருகப் பிணைக்கப்படுகின்றனர். ஆண்டவன் ஒருவனே, மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாவர் என்பதே இஸ்லாத்தின் மூலமந்திரம். ஏனெனில் இஸ்லாம் மார்க்கம் மானிடகோடிகளுக்கு உகந்த மார்க்கமாம்.

## ஜன நாயக மயம்

ஜன நாயகம் என்பது உண்மையான முறையில் பார்த்தால் முஸ்லிம்களின் தொழுகையில் வெளிப்படையான அம்சமாகும். தொழுகையில் மட்டு மன்று. முஸ்லிம்களின்

வாழ்க்கையின் ஒவ்வொரு வகையிலும் அவ்விதம் ஜன நாயகம் இருப்பதைப் பார்க்கலாம். பணக்காரனும் ஏழையும் முதலாளியும் தொழிலாளியும் ஆண்டவனைத் தொழுங் காலையில் யாதோர் வேற்றுமையுமின்றித் தோளோடு தோள் கலந்து நிற்பர். ஆண்டவனுக்கு முன்னிலையில் அனைவரும் சமமே.

முஸ்லிம்களின் தொழுகையில் பாரமார்த்திகம்மட்டுமே உளது என்று எண்ணிவிடவேண்டாம்; சரீரப்பயிற்சியும் உளது. தொழுங்காலைவில் உடலின் அவயவங்களுக்கு வேலை ஏற்படுகிறது. மண்டியிட்டும் குனிந்தும் நிமிர்ந்தும் எழுந்தும் தொழவேண்டும். அதனால் உடலிலே ஒவ்வொரு நரம்பு, சதை, எலும்பு இவற்றிற்குப் பயிற்சி ஏற்படுகின்றது. எனவே தொழுகையினால் மன நிம்மதியுடன் சரீர ஆரோக்கியமும் உண்டாகிறது. ஆதலின், சரீரப் பயிற்சி அவசியமென்று தற்கால நாகரீகம் உணரு முன்பே, நூற்றாண்டு நூற்றாண் டாக முஸ்லிம்கள் சரீரப் பயிற்சியின் பலனை எய்தி வருகின்றனர்.

## பரிசுத்த முறை

தொழுகைக்கு முன் அங்கசுத்தி அதிஅவசியம், கட்டாயமுமாம். இவ்விதம், தெய்வத்தொண்டின் பரிசுத்தத் தன்மை இஸ்லாத்தில்உளதென்பதைக் கவனித்தல்வேண்டும். தூய்மை என்பதற்கு அடையாளம் அழுக்கில்லாதிருப்பதே யாம், என்றெண்ணிக் கிடந்த உலகினுக்கு உடல்சுத்தியும் உடைசுத்தியும் அகசுத்தியும்அவசியம் என்று ஆணையிட்ட பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே. இவ்வகையில் கீழ்நாடு, மேல்நாடு ஆகிய இரண்டிலும் கோடிக்கணக்கான மக்களின் நன்றியறிவுக்கு அப்பெருமான் (ஸல்.) பாத்திரமானார்கள். சுகாதாரமுறையை ஊட்டியவரும் காட்டியவரும் யாவரெனப் பலருக்குத் தெரியாவிடினும் அப்பெருமானார் (ஸல்.) ஊட்டி யவரும் காட்டியவருமாவார்கள். பல் விளக்குதலும் கட்டாயமான கடமையாம். இத்துறையிலும் உலகம் அப்பெருமானின் போதத்தைப் பின்பற்றியுள்ளது.

## கல்வியே சாதனம்

உலகமுன்னேற்றத்துக்குக் கல்வியே சாதனமாம். நவீன நூலாசிரியரில் அனைவரும் திருநபியவர்களை அவ்விஷயமாகப் போற்றி எழுதி வருகின்றனர். குறுகிய சிந்தை கூடாதென்பதே அப்பெருமானது கோட்பாடு. அவர்களது வசனங்களில் சில வருமாறு :

“அறிவு வளர்ச்சியை நாடி அவசியமானால் சீனாவுக்கும் செல்லுக ; மார்க்க விசுவாசிகளுக்கு வழி நடுவே கிடைக்கும் ஒட்டகம் போன்றது தத்துவ ஞானம்; ஆதலின், தத்துவ ஞானத்தைக் கண்ட இடத்தில் மேற்கொள்ளுக ; ஆணாயினும் பெண்ணாயினும் சரி, ஒவ்வோர் முஸ்லிமும் அறிவு வளர்ச்சி பெறுதல் வேண்டும்.”

அப்பெருமானார் (ஸல்) அவர்கள் ஆணையிட்ட வண்ணமே ஒவ்வொரு நாட்டிலிருந்தும் முஸ்லிம்கள் அறிவு தேடிக் கொண்டனர். எங்கும் கலாசாலைகள் நிறுவப்பட்டன ; அக்கலாசாலைகளிலே வைத்தியம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய பற்பல கலைகளும் போதிக்கப்படலாயின. ஸ்பெயின் தேசம் முன்னம் ஓர் எழுநூறு வருஷம் இஸ்லாமிய தேசமாக இருந்து வந்தது. அங்கிருந்த கலாசாலையில் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் மாணவர் வந்து, அருகருகே வீற்றிருந்து, ஜாதி, சமய வேற்றுமையின்றி, முஸ்லிம் பேராசிரியரிடம் போதனை பெற்று, அப்பால் தங்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்று, நாகரீகம் எனும் ஞானச் சுடரை எங்கும் ஏற்றிப் பிரகாசம் ஊட்டலாயினர்.

## கல்விக்கு மூல ஸ்தானம்

இன்று கீழ்நாட்டினுக்கு மேல்நாடு ஞானம் ஊட்டுகிறதென்றால், அந்த ஞானம் அன்னியரின் ஞானம் என்பதில்லை ; ஐரோப்பியரின் ஞானம் என்பதும் இல்லை ; மற்று ஐரோப்பாவுக்கு முஸ்லிம்கள் அன்று புகட்டிய ஞானத்தின் விளைவேயாம் என்று நாம் கொள்ளுதல் வேண்டும். ஆனால் முஸ்லிம்களிடமிருந்து பெற்ற ஞானத்தை அப்பால் ஐரோப்பியர் வளர்த்து வரலாயினர் என்பது மெய்தான்.

ஒவ்வொருவனும் அறிவு வளர்ச்சியை நாடுதல் வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆணையிட்டதன் பயனாகவே, இக்காலத்தில் நவீனமாகப் பற்பல அற்புதங்கள் கண்டு பிடிக்கப்படலாயின; அவ்விதம் அறிவு வளர்ச்சிக்கு அடிகோலிய ஞானபண்டிதர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே. முற்காலத்திய முஸ்லிம்களுக்கும் நாம் கடமைப்பட்டவராவோம் என்று ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள் உலகம் உணர்ந்து கொள்ளும் என்பது நிச்சயம்.

மார்க்கமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று சிலர் சொல்லியுளர். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திட்டமான ஆணைக்கு இணங்க இஸ்லாம் மார்க்கமோ விஞ்ஞானத்தைத் தழுவிய மார்க்கமேயாம். விஞ்ஞானத்திற்குரிய அறிவு உண்மையில் மார்க்கத்திற்குரிய அறிவாம். அந்நாளில் முஸ்லிம்கள் கண்ட பல்கலைக் கழகங்களின் குழந்தைகளே போல்வன இக்காலத்திய பல்கலைக்கழகங்கள். மேலும், அக்காலத்தில் முஸ்லிம் பேராசியர்கள் தரித்துவந்த 'கௌன்' எனும் ஆடையையே இக்காலத்திய பேராசிரியர்களும் தரித்து வருகின்றனர் என்பதைக் கவனித்தல் வேண்டும்.

## முடிவுரை

இதுவரையில் சொல்லி வந்ததை எண்ணிப் பார்க்குமிடத்து, நம்பெருமானவர்கள் குணத்திலும் ஒழுக்கத்திலும் ஒப்புயர்வு இல்லாதவர்கள் என்பது தெற்றெனப் புலப்படும். அவர்கள் சாந்தமூர்த்தி, சற்குண சம்பன்னர், பரமநீதிமான், உலகத்தை உய்விக்க வந்தவர், பாரபட்சமற்ற புண்ணியர், பரம தயாளர், அற்புத சக்தி வாய்ந்தவர்.

அந்த அற்புத சக்திகளில் இரண்டு எக்காலத்தும் நிலைத்திருக்கக் கூடியவை. எம்பெருமானவர்கள் அவதரித்த காலத்திலே அரேபியர் மிக்க கேவல நிலையில் இருந்தனர். அம்மக்களின் வாழ்க்கை மிருகவாழ்க்கையாகவே இருந்தது. மூடக்கொள்கைகளில் அன்னவர் மூழ்கிக் கிடந்தனர். கல்வி

வாசனை என்பது இம்மியும் கிடையாது. கொலை, களவு முதலிய தீச்செயல்கள் நிரம்பிக்கிடந்தன.

அத்தகைய மக்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் உபதேசங்கேட்டு ஒரே தெய்வத்தின் உண்மைப் பக்தர் ஆயினர். அஞ்ஞானம் விடுத்து ஞானிகளாகி, உலகத்தினரையும் சன்மார்க்கராக்கினர். கல்வி கேள்விகளில் அரேபியர் வல்லுநராக விளங்க அன்னவரிடமிருந்தே கிரேக்கரும் உரோமரும் ஐரோப்பியரும் பற்பல கலைஞானங்களை ஓதி உணரலாயினர். ஐரோப்பாவின் உயர்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் மூலபுருஷர் அரேபியரே.

மிருகப் பிராயமாயிருந்த அரேபியர் நம்பெருமானவர்களின் போதங்கேட்டுத் திருந்தியதோடு, பிறரையும் திருத்தும் ஞானவான்களாயினரென்றால் அவ்வளவுக்கும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே காரணம் அல்லவா? உலக சரித்திரத்தில் அத்தகைய ஆச்சரியமான மாறுதலை உண்டாக்கியது எது? பெருமானவர்களின் அமுத வசனங்கள் அன்றோ?

அந்த அமுத வசனங்களே திருகுர்ஆன் ஷரீபின் கருத்தை விளக்குவனவாகும். சகல கட்டளைகளையும் நம் பெருமானவர்கள் தங்கள் நடைமுறையில் அனுபவவாயிலாகக் காட்டிவந்தார்கள். திருகுர்ஆன்ஷரீப் முழுவதும் ஆண்டவனது திருவாக்காம். அவை நம் பெருமானவர்கள் மூலம் வெளியாயின. மீகாமனில்லாமல் தத்தளிக்கும் மரக்கலமேபோல் தவித்துநிற்கும் ஜன சமூகத்துக்கு அக்குர்ஆன் ஷரீபையும் நாயகம் (ஸல்.) அவர்களின் சொல் செயல் இவற்றையும் பின்பற்றுவதைத் தவிர வேறு கதியுளதோ? பின்பற்றின், அரேபியர் அளவிலாச் சிறப்பெய்தியதுபோல் அனைவரும் அடையலாமென்பது திண்ணம். இம்மையில் மன அமைதியும் மறுமையில் முத்தியும் பெற விரும்புவோருக்கு எம்பெருமானவர்களது உயரிய வாழ்க்கை முறையும், அவர்களுக்கு ஆண்டவனால் அருளப்பட்ட திருகுர்ஆனுமே தக்க சாதனங்களாம்.

---

Kesari Printing Works, Madras.



முந்துங்கள்! கொஞ்சம் பிரதிகளே யுள்ளன! முந்துங்கள்!

# திருமறைத் தமிழுரை.

தென்னிந்திய முஸ்லிம்கள் நீண்ட நாளாய் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த திரு குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு, கூத்தானல்லூர் சாந்தி பிரகடன சபையாரின் நன்முயற்சியால் (தென்னிந்திய உலமாக்களால் பரிசீலனை செய்யப்பட்டு, உலமாக்கள் மகாநாட்டில் அங்கிகாரமாகி) 10 ஜுஸ்உக்கள் அடங்கிய முதல் பாகம் வெளிவந்து விட்டது. ஆண்டவனின் திருவசனத்தைப் படித்து அதன் கருத்துகளை உணர்ந்தொழுக வேண்டியது ஒவ்வொரு மானிடர் மீதுமுள்ள முக்கியக் கடமையாகும்.

இது ஒவ்வொரு ஆயத்தையும் ஓதி அதற்குள்ள அருத்தத்தை நல்ல விதமாய்த் தெரிந்துகொள்வதற்கு ஹேதுவான முறையில் அமைக்கப்பட்டு நேர்த்தியான பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து பயன் பெறுவார்களாக.

கிரயம் ரூ. 4-0-0. போஸ்டேஜ் வேறு.

**கிடைக்குமிடம் :—**

O. S. சதக்தம்பி மரைக்காயர்,
36, அர்மீனியன் தெருவு,
ஜி. டி. மதராஸ்.

**நமது ரங்கூன் ஏஜண்டு :—**

S. அப்துற் றஹ்மான் மரைக்காயர்,
131, முதல் ரோடு, ரங்கூன்.

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

## உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

இது மக்களுக்கு சன்மார்க்கம், பகுத்தறிவு, சகோதரத்துவம், சமாதானம் முதலிய சிறந்த குணங்களைப் போதிப்பதில் நிகரற்று விளங்கும் அரும்பெரும் பொக்கிஷமாகும். வழிகேடர்கள் தோன்றி சன்மார்க்கத்தைச் சின்னாபின்னப் படுத்தி சீர்கெடுத்து வரும் இக்காலை, அக்கொடிய வியாதியை நீக்க இஃதோர் தக்க ஔஷதமாய்த் திகழ்கின்றதென்பது இனிது புலனாகும். ஆகவே இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

வருட சந்தா :—உள் நாடு ரூ. 3. வெளி நாடு ரூ. 4.

மானேஜர் : ஹிபாஜத்துல் இஸ்லாம்,
43-A, போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

# ஸைபுல் இஸ்லாம்.

இஃது முஸ்லிம் சமுகம் கல்வி, கைத்தொழில், வியாபாரம் முதலிய துறைகளிலும், தேசீய ராஜீயத் துறைகளிலும் முன்னேற்றமடைவதற்கு அரும்பாடுபட்டு வருகிறது. தவிரவும், கள்ள காதியானிகளின் கபட சூழ்ச்சிகளை நடுப்பகல் சூரியனை போன்று விளக்கிக் காட்டி மானிட வர்க்கத்தினர்க்கு பல நலன் பலன்களைச் செய்து வருகிறது. ஆகவே இவ்வுண்மையை யுணர்ந்த ஒவ்வொருவரும் இதற்கு சந்தாதாரராய்ச் சேர முன் வரவேண்டுமெனக் கோரப்படுகின்றார்கள்.

சந்தா :—உள்நாடு ரூ. 10. வெளிநாடு ரூ. 12.

மானேஜர் : ஸைபுல் இஸ்லாம்,
47, செம்புதாஸ் தெரு, சென்னை.